தமிழ் நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1971 ஜூலை 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

துவக்கப் பள்ளிகளுக்கு வானொலிப் பெட்டிகள்

* 170 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளுக்கு வானொலிப் பெட்டி வாங்கித் தரும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. சு. துரைசாமி : வானொலி நிகழ்ச்சிகள் இளைஞர்களுக்கு நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்வதன் மூலம் அவர்களுக்கு ஊக்கம் ஊட்டக்கூடிய முறையில் இருப்பதால் ஆரம்பப் பள்ளி களுக்கு வானொலிப் பெட்டிகள் வாங்கிக் கொடுக்க அரசு உதவி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வானொலிப் பெட்டியில் இன்றியமையாமையை அரசு உணருகிறது. ஆனால், அதற்காக உயர்நிலைப் பள்ளிகளுக்கு மானியம் வழங்குவது இல்லை. உயர்நிலைப் பள்ளிகள் கூட, வானொலிப் பெட்டியை கல்வி தனிக் கட்டண நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளலாம் என்ற அனுமதி அளிக்கப் பட்டிருக்கிறது. கல்விச் சீரமைப்பு மாநாட்டின்போது பலரும் நன்கொடைகள் வழங்குவதிலிருந்து வானொலிப் பெட்டிகள் உயர்நிலைப் பள்ளிகளில் வைத்துக் கொள்ளப்படுகின்றன. அதைப் போலவே துவக்கப் பள்ளிகளுக்கும் வானொலிப் பெட்டிகள் நன்கொடையாக வழங்கப்படும் சூழ்நிலை ஏற்படும்போது அவற்றை அந்தந்தப் பள்ளிகளுக்கு உரிமையாக்கலாம். இப்பொழுது பள்ளிச் சீரமைப்பு மாநாட்டில் வழங்கப்படும் நன்கொடைகளைக் கொண்டு பள்ளிகளுக்கு உரிமையாக்கலாம். இப்பொழுது பள்ளிச் சீரமைப்பு மாநாட்டில் வழங்கப்படும் நன்கொடைகளைக் கொண்டு துவக்கப் பள்ளிகள் கூட வானொலிப் பெட்டிகளைப் பெறும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

திரு. பெ. மலைச்சாமி : வானொலி மூலம் ஆங்கிலக் கல்வி போன்ற கல்வி போதனையெல்லாம் நடைபெறுகிறது. அவை மாணவர் களுக்குப் பெரிதும் பயன்படுமாதலால், அரசாங்கமே வானொலிப்

பெட்டிகளை வாங்கி பள்ளிகளுக்கு வழங்க இயலாவிட்டாலும், தொடர்புடைய ஊராட்சி மன்றங்கள் அந்தந்தத் தொடக்கப் பள்ளிகளில் வானொலிப் பெட்டிகளை வாங்கி வைக்கவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலில் கூறியபடி, பள்ளிகள் கட்டாயமாக வானொலிப் பெட்டிகளை வாங்கித் தீரவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிப்பதற்கில்லை. ஆனால், எல்லாப் பள்ளிகளும் வானொலிப் பெட்டிகளைப் பெறத்தக்க அளவுக்கு உதவிகளைச் செய்ய வேண்டும் என்றும் அதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்றும் ஊராட்சி ஒன்றியங்கள், மன்றங்கள் எல்லாம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

கல்விச் சீரமைப்பு மாநாட்டின் போது ஆசிரியர்கள் செல்லும் போது, அந்தந்தப் பள்ளிகளின் தேவைகள் என்ன என்ன என்று நன்கொடையாளர்களிடம் அறிவிக்கும்போது எந்தந்தப் பள்ளிக்கு வானொலிப் பெட்டிகள் தேவை என்று அறிவிக்கப்படுகிறது. பல இடங்களில் வானொலிப் பெட்டிகளும் வாங்கித் தந்திருக்கிறார்கள். அது மேலும் கேட்டுக் கொள்ளப்படுகிற நிலையில் வானொலிப் பெட்டி வாங்கப்படுகிறது.

திரு. இ. எஸ். தியாகராசன் : ஹையர் எலிமென்டரி பள்ளிகளுக்கு வானொலிப் பெட்டிகள் வாங்கிக் கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலில் சொல்லியபடி, அதற்காக அரசு நிதி ஒதுக்குவதில்லை. "கல்வி தனிக் கட்டண நிதி" யிலிருந்து வாங்கிக் கொள்ள வேண்டு மானால் அதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்கும்.

திரு. நா. வீராசாமி : பல பள்ளிகளில் வானொலிப் பெட்டிகள் வைத்திருக்கிறார்கள். ஆனால், அதற்குத் தேவையான மின்சாரம் கிடைக்கவில்லை. எல்லாப் பள்ளிகளிலும் முதலில் மின்சார வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மின்சாரம் இல்லாத ஊர்களில் பாட்டரியைத்தான் பயன்படுத்த வேண்டும். பல பள்ளிகளில் மின்சாரம் இருந்தும், வானொலிப் பெட்டி இருந்தும், அதைப் பயன்படுத்தாத நிலை இருந்து வருகிறது. அதைப் பயன்படுத்த வேண்டும் என்று நாம் அவர்களுக்கெல்லாம் ஊக்கம் தர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : வானொலி நிகழ்ச்சிகளில் இப்பொழுது ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்குப் பயன் தரத்தக்க நிகழ்ச்சி என்ன என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி முழு விவரம் இல்லை. ஆனால், உயர்நிலைப் பள்ளியில் ஆறாவது வகுப்புக்கும், மற்ற வகுப்புகளுக்கும் எல்லாப் பாடங் களுக்குமே வாரத்திற்கு குறிப்பிட்ட நேரம் ஒதுக்கித் தந்திருக் கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் முழு விவரம் அளிக்கலாம்.